| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| மாவட்டம் : | **புதுக்கோட்டை** | காலம் : | **29/06/2024** | முதல் | **03/07/2024** |
| அறிக்கை எண் : | **052/ 2024** | வெளியீட்டு நாள் : | | **28/06/2024** | |

## புதுக்கோட்டை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27° - 28° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை (23.06.2024 முதல் 27.06.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 03-07-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23/06 | 24/06 | 25/06 | 26/06 | 27/06 | **தேதி** | **நாள்-1** 29/06 | **நாள்-2** 30/06 | **நாள்-3** 01/07 | **நாள்-4** 02/07 | **நாள்-5** 03/07 |
| 4.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 4 | 3 |
| 35 | 36 | 36 | 35 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 31 | 32 | 33 | 33 | 33 |
| 27 | 26 | 28 | 27 | 27 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 26 | 27 | 27 | 27 | 26 |
| 6 | 6 | 7 | 7 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 6 | 6 | 7 | 7 |
| 67 | 67 | 74 | 74 | 73 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 60 | 60 | 70 | 70 |
| 89 | 56 | 56 | 54 | 67 | | 30 | 30 | 40 | 30 | 30 |
| 18 | 13 | 23 | 22 | 17 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 10 | 8 | 8 |
| தெற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு | மேற்கு | காற்றின் திசை | **தெற்கு** | **தெற்கு** | **தெற்கு** | **தென் மேற்கு** | **தெற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூலை 1, 2 மற்றும் 3 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 31°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 26°-27° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு(28ஜூன்-11 ஜூலை 2024):**

## மழைப்பொழிவு :

28-06-2024 - 04-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

05-07-2024 - 11-07-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 04-07-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 34° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

05-07-2024 - 11-7-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 36° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

28-06-2024 - 11-07-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : நிலக்கடலை, தென்னை, கால்நடை.**

**நிலக்கடலை:**

தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நிலக்கடலை பயிரில் முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் அறிகுறியாக இலைகளின் இரண்டு பக்கங்களிலும் வட்டமான கரும் பழுப்பு நிறப்புள்ளிகள் காணப்படும். கரும்புள்ளியைச் சுற்றி மஞ்சள் நிற வளையங்கள் காணப்படும். அறிகுறிகள், காம்புகளிலும், தண்டுகளிலும் காணப்படும்.

இதனைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு கிராம் என்ற அளவில் குளோரோதலோனில் கலந்து தெளிக்கலாம்.

**தென்னை:**

தென்னந்தோப்புகளில் காண்டாமிருக வண்டுகளின் நடமாட்டம் பரவலாக காணப்படுகிறது.
இதனை கட்டுப்படுத்த வண்டு தாக்கப்பட்டு மடிந்து போன மரங்களை தோப்பிலிருந்து அகற்றி அழித்துத் விட வேண்டும். தோப்பை சுத்தமாக வைக்க வேண்டும்.

கம்போஸ்ட் மற்றும் உரக் குழிகளில் இருந்து காண்டா மிருக வண்டின் முட்டைகள், புழுக்கள், கூட்டுப் புழுக்களை பொறுக்கி அழிக்கவும்.

கோடை மற்றும் மழைக் காலங்களில் அந்தி நேரங்களில் விளக்கு பொறிகளை தோப்புக்குள் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.

இனக்கவர்ச்சிப் பொறியினை ஹெக்டருக்கு 5 என்ற வீதத்தில் வைக்கலாம்.

250 மில்லி மெட்டாரைசியம் அனிசோபிலே மற்றும் பச்சைச் சைமஸ் கார்டைன் பூஞ்சை கலவையினை 750 மில்லி நீர் சேர்த்து எருக்குழியில் தெளிப்பதனால் வண்டுகளின் இளம் புழுக்களை அழிக்கலாம்.
ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.

வேப்பங்கொட்டை தூளையும், மணலையும் 1க்கு 2 என்ற விகிதத்தில் கலந்து, மரம் ஒன்றிற்கு 150 கிராம் வீதம் நடுக் குருத்தின் 3 மட்டை இடுக்குகளில் வைக்கலாம்.

**கால்நடை:**

தற்போது நிலவும் பருவச்சூழ்நிலையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோய் எல்லா வயது ஆடுகளையும் தாக்கும். ஆனால் இளம் வயது ஆடுகளே பெரும்பாலும் பாதிக்கப்படுகின்றன. மழைக்குப்பின் புதிதாக முளைத்த பசுமையான புல்வெளியில் மேய்ச்சலுக்குச் செல்லும் ஆடுகளுக்கு இந்நோய் ஏற்படும். இறப்பதற்கு முன் வலிப்பு ஏற்பட்டு துள்ளி துள்ளி விழும்.

இந்நோயிலிருந்து ஆடுகளை பாதுகாக்க சூரியன் உதித்து ஒரு மணி நேரம் கழித்து ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும். உடனடியாக அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆடுகளுக்கு துள்ளுமாரி நோய் தடுப்பூசி போடுதல் மிகவும் அவசியம் ஆகும்.